1993 ஏப்ரல் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது என் மீது (குறுக்கீடுகள்) திரு. கா.ப. பட்டாபிராமன், பாயின்ட் ஆப் ஆர்டர். மற்றவர்கள் எல்லாம் உட்காருங்கள்.

முற்பகல் 11-25

திரு. கா.ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமாரதாஸ், பெண்களைப் பார்த்து இந்த அளவுக்குப் பேசுவது முறையற்ற செயல். (குறுக்கீடு)

டாக்டர் தே. குமாரதாஸ் : என்னைப் பார்த்து அவர்கள் பேசலாமா? (குறுக்கீடுகள்)

3. பேரவைப் பணிகளினின்றும் உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் தற்காலிகமாக நீக்கி வைக்கப்படுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசிக் கொண்டிருக்கிற முறையெல்லாம் சரியல்ல. (குறுக்கீடு) குமாரதாஸ் உங்களுடைய செயல் முறையற்றதாக இருக்கிறது. அவையை விட்டு வெளியேற வேண்டும். அவையை விட்டு வெளியேற உத்தரவிடுகிறேன். அவையை விட்டு வெளியேற உத்தரவிடுகிறேன். முறையற்ற தன்மையில் அவையின் கண்ணியத்திற்குக் குறைவாக நடந்து கொள்கிற காரணத்தினால்— குதித்துக் குதித்துப் பேசுகிற காரியம் எல்லாம் அவையின் கண்ணியத்திற்குக் குறைவானது; எனவே—குமாரதாஸை பேரவையிலிருந்து வெளியேற உத்தரவிடுகிறேன். குமாரதாஸ், இந்தக் கூட்டத் தொடரில் இரண்டுமுறை வெளியேற்றப்பட்டிருக்கிற காரணத்தினால், பேரவை விதி 120-இன் கீழ், பேரவையின் எஞ்சிய நாட்கள் அனைத்திற்கும் பேரவைக் கூட்டங்களிலிருந்து குமாரதாஸைத் தள்ளி வைக்கிறேன். (குறுக்கீடுகள்) மற்ற உறுப்பினர்கள் உட்கார வேண்டும். இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் குமாரதாஸ் தள்ளி வைக்கப்படுகிறார்.

(டாக்டர் தே. குமாரதாஸ் பேரவையினின்றும் வெளியேறினார்).

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் ; திரு. இளம்வழுதி.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ....(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் உட்காருங்கள். அவர் என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் சொல்கிறார் என்று கேட்டுச் சொல்கிறேன்.

திரு. இளம்வழுதி : அமைச்சர்களோ, மற்ற ஆளுங்கட்சி உறுப்பினர்களோ பேசுகிற நேரத்தில், நாங்கள் எழுந்து விளக்கம் சொல்ல முற்படுகிற நேரத்தில், 'ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டு இருக்கும்போது, இன்னொரு உறுப்பினர் குறுக்கிடக் கூடாது, என்று ஒரு விதியைச் சொல்கிறீர்கள். அப்படி இருக்கும்போது, எதிர்க்கட்சித் தரப்பிலே நாங்கள் பேசுகிறபோது, இத்தனை பேரும் எழுந்து பேசினால் எப்படி?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானும் அதைத்தான் சொல்கிறேன் ; அவர்களையும் உட்காரச் சொல்கிறேன். (குறுக்கீடு) இப்போதாவது விதியைப் புரிந்து கொண்டதற்கு நன்றி. (குறுக்கீடு) இளம்வழுதி விதியைப் புரிந்து கொண்டதற்கு நன்றி. ஆகவேதான் மற்றவர்களுக்கும் சொன்னேன். இளம்வழுதி பேசிக்கொண்டிருக்கிறார் உட்காருங்கள் என்று விதியைப் புரிந்து கொண்டதற்கு நன்றி. இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை.

2. ஒத்திவைப்புத் தீர்மானம்—தொடர்ச்சி.

கோவில்பட்டியில் 29—3—1993 அன்று விவசாயிகள் நடத்திய பேரணியின்போது இருவர் மரணமடைந்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா.சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 29—3—1993 திங்கள் அன்று, கோவில்பட்டியிலே மத்திய அரசினுடைய மூன்று மடங்கு உரவிலை உயர்வு, மத்திய அரசினுடைய யூனிட்டுக்கு 50 பைசா மின்கட்டணம் விதிக்க, தமிழக அரசை நிர்ப்பந்திக்கும் செயல், ஜப்தி நடவடிக்கை ஆகியவற்றைக் கண்டித்து விவசாயிகள் சங்கத்தின் சார்பிலே, ஊர்வலம் நடத்தினார்கள். ஐம்பதுக்கும் மேற்பட்ட.....—...............(குறுக்கீடு)